நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்:திருமதி.ப.மகேஸ்வரி.எம்.எஸ்.சி.,எம்பில்.,பி.எட்.,

ந.க.எண்.12938/ஆ4/2019 நாள்.03.10.2024.

பொருள்: பணிவரன்முறை - கருணை அடிப்படை பணி நியமனம் - நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம், உருது ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் கடந்த 17.03.2016 அன்று இறந்துபோன திருமதி.செ.கலைச்செல்வி என்பாரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.சௌ.ஜெகதீஸ் என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியில் பணிநியமனம் செய்யப்பட்டது - நியமன நாள்.01.08.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ 1) துறை, நாள்.23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ 1) துறை, நாள்.26.02.2021.
3. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக் கல்வி (பக1(1))த் துறை நாள்.09.09.2022.
4. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1)த் துறை நாள்.08.03.2023.
5. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.26062/ஜே/இ4/2023 நாள்.28.07.2023.
6. நாமக்கல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.12939/ ஆ4/2019 நாள்.31.07.2023.
7. நாமக்கல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.12939/ ஆ4/2019 நாள்.02.01.2024.
8. அரசு கடித (efile) எண்.4419/தொ.க.1(1)/2024-1 நாள்.17.05.2024.
9. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.26062/ஜே/இ2/2023 நாள்.22.05.2024.
10. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.00898/ஜே/இ1/2024 நாள்.14.08.2024.

========

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம், உருது ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் கடந்த 17.03.2016 அன்று இறந்துபோன திருமதி.செ.கலைச்செல்வி என்பாரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.சௌ.ஜெகதீஸ் என்பார் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணப்பித்ததின் தொடர்ச்சியாக, அவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நிர்ணயம் செய்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளதை தொடர்ந்து , பார்வை 5இல் காணும் ஒதுக்கீட்டு ஆணையின் அடிப்படையில், பார்வை 6இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி, தனியருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், நாமக்கல் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலைக் கல்வி) இளநிலை உதவியாளராக 01.08.2023 முற்பகல் முதல் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டார்.

பார்வை 8இல் காணும் அரசுக் கடிதத்தில் தனியரின் பணியினை வரன்முறை செய்திட எவ்வித விதித் தளர்வும் தேவையில்லாத பட்சத்தில் பார்வை 4இல் காணும் அரசாணையில் இனம் 16இல் தெரிவித்துள்ளதன்படி சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காண் பணியாளரை தற்போது பணியாற்றி வரும் விவரங்களின் அடிப்படையில் தனியரின் கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கு விதித் தளர்வு ஏதும் தேவையில்லாததால் பார்வை 3இல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள அதிகார பகிர்வின் அடிப்படையில் நியமன அலுவலர் என்கின்ற முறையில் கீழ்கண்டவாறு அவரது பெயருக்கு எதிரே கலம் 4இல் கண்ட நாள் முதல் பணிவரன்முறை செய்து உத்திரவிடப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | **திரு.சௌ.ஜெகதீஸ், இளநிலை உதவியாளர், மாவட்டக் கல்வி அலுவலகம், (இடைநிலைக் கல்வி) நாமக்கல்.** | 01.08.2023 முற்பகல் | 01.08.2023 முற்பகல் |

மேலும் அன்னார் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டுகால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திடல் வேண்டும் எனவும், தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் (தேர்வுக் குறியீட்டு எண்.172) தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், மேற்காண் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பின்னரே தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்கப்படும் எனவும், தகுதிகாண் பருவம் முடித்த பிறகு இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும் எனவும், குறிப்பிட்ட காலக்கெடுவான ஐந்தாண்டுகளுக்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைநூல் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை எனில் பணிநீக்கம் செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறும், பணிவரன்முறை ஆணை, அசல் பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்புமாறு சார்ந்த அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: அசல் ஆணை, அசல் பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றுகள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
நாமக்கல்.

03/01/24

பெறுநர்: சார்ந்த பணியாளர் (உரிய வழியாக).

நகல்: மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலைக் கல்வி), நாமக்கல்.